THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

# SUGGESTED SOLUTIONS

NOT FOR SALE

**KE 5 – Commercial Insight for Management**

**March 2019**

All Rights Reserved

# பிரிவு 1

**விடை 01**

1.1

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 1.4.1** | |
| **சரியான விடை: A** | |

1.2

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 2.2.1** | |
| **சரியான விடை : D** | |

1.3

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 2.7.1** | |
| **சரியான விடை : B** | |

1.4

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 3.4.1** | |
| **சரியான விடை : D** | |

1.5

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 2.8.2** | |
| **சரியான விடை : C** | |

1.6

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 3.1.1** | |
| **சரியான விடை : D** | |

1.7

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 3.11.1** | |
| **சரியான விடை : B** | |

1.8

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 4.6.1** | |
| **சரியான விடை : A** | |

1.9

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 5.4.2** | |
| **சரியான விடை : B** | |

1.10

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 6.14.1** | |
| **சரியான விடை : C** | |

**( மொத்தம்: 20 புள்ளிகள்)**

NOT FOR SALE

**விடை 02**

2.1

| **கற்கை வெளிப்பாடு : 1.2.1** |
|---|
| • தொட்டுணர முடியாமை (Intangibility)- சேவைகளை தொட, ருசிக்க முடியாது<br>• வேறாக்க முடியாமை (Inseparability)- சேவை வழங்குனரிடமிருந்து வேறாக்க முடியாமை<br>• பல்லினத்தன்மை (Heterogeneity)- ஒவ்வொரு விநியோகத்தின்போதும் சேவையின் தரம் வேறுபடும்.<br>• அழிவடையும் தன்மை (Perishability)- எதிர்காலத்தில் வழங்குவதற்காக சேவைகளை களஞ்சியப்படுத்த முடியாது.<br>• உடைமை (Ownership)- சேவைக் கொள்வனவு உடைமை மாற்றத்தினை ஏற்படுத்தாது. |

2.2

| **கற்கை வெளிப்பாடு : 3.6.1** | |
|---|---|
| (a) | புள்ளி விலை நெகிழ்ச்சி PED = 1.5 |
| (b) | பொருளானது நெகிழ்ச்சிக் கேள்வியினை கொண்டிருப்பதனால் , கேள்விக் கணிய மாற்றச் சதவீதமானது விலை மாற்றச் சதவீதத்திலும் அதிகமாக இருப்பதனால், விலையில் வீழ்ச்சியானது மொத்த வருமானத்தினை அதிகரிக்கச் செய்யும். |

2.3

| **கற்கை வெளிப்பாடு : 2.3.1** | |
|---|---|
| (a) | இடைநிலை முகாமையாளர்கள் ஒரு அமைப்பு, பிரிவு அல்லது கிளையிலுள்ள அலகுக்கு பொறுப்பானவர்கள் ஆவர். அவர்கள் தமது அலகுகளின் தொழிற்பாடுகள் தொடர்பில் சிரேஷ்ட முகாமைக்கு வகைகூற பொறுப்புடையவர்கள் (accountable) ஆவர். அவர்களின் வேலை கம்பனியின் கொள்கைகள் மற்றும் குறிக்கொள்களுக்க அமைவாக திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தமது அலகுகளை வழிநடத்தி ஒழுங்குபடுத்துவது சம்பந்தப்பட்டதாகும். |
| (b) | நிபுணர் அதிகாரம் (Expert power)<br>சட்டரீதியான அதிகாரம் (Legitimate power)<br>எதிர்மறை அதிகாரம் (Negative power) |

NOT FOR SALE

2.4

| கற்கை வெளிப்பாடு : 3.12.1 |
| --- |
| குறுகிய காலத்தில் உற்பத்திப் பொறியின் அளவினை மாற்றமுடியாது ஆகையால், குறுகிய காலத்தில் U-வடிவானது நிலையான அளவான பொறித் தொகுதியிலிருந்து அதிகரித்துச் செல்லும் அல்லது குறைவடைந்து செல்லும் உற்பத்தியின் காரணமாக ஆகும். இது குறுங்காலத்தில் குறைந்து செல்லும் எல்லை வருவாய் விதியின் தொழிற்பாடு (operation of Law of Diminishing Marginal Returns) என அழைக்கப்படும். |




2.5

| கற்கை வெளிப்பாடு : 4.3.2 |
| --- |
| • GDP ஆனது ஒரு நாட்டிற்கு உள்ளாக ஏற்படும் பொருளாதார செயற்பாடுகளிலிருந்து பெறப்படுவதாகும்.<br>• GNP = GDP + வெளிநாட்டிலிருந்து நிகர ஆதன வருமானம். இது சில தேசிய வருமானம் வெளிநாட்டில் மேற்கொண்ட முதலீடுகளிலிருந்து ஏற்படும் அதேவேளை வேறுசில உள்நாட்டு வருமானம் உள்நாட்டு பிரசைகள் அல்லாதோரால் உழைக்கப் படுகின்றது. (ஒரு நாட்டின் பிரசைகளால் பிறப்பிக்கப்படும் வருமானம் GNP ஆகும்.)<br>• NNP என்பது GNP இலிருந்து நிலையான மூலதன நுகர்வு மற்றும் இயற்கை வள இழப்பு ஆகியவற்றை கழிக்க வரும் தொகையாகும். |

2.6

| கற்கை வெளிப்பாடு : 3.13.1 |
| --- |
| **பிரதிகூலங்கள்:**<br>• தரக் கட்டுப்பாட்டினை பேணுதல் கடினமானது.<br>• உற்பத்திப் பொருட்கள் வியாபார இரகசியங்களை பயன்படுத்துமேயாகில் இரகசியத்தன்மை இழப்பு.<br>• போட்டியாளர்கள் ஒரே வெளிவாரி நிறுவனத்தை பயன்படுத்தவதனால், இது போட்டி அனுகூல மூலமாக இருத்தல் சாத்தியமற்றது / போட்டி அனுகூலத்தை பெறுதல் கடினமானது. |

NOT FOR SALE

2.7

**கற்கை வெளிப்பாடு : 4.4.2**

(a) கட்டமைப்பு வேலைவாய்ப்பின்மை (Structural unemployment)
இது ஒரு கைத்தொழிற் துறையின் புறநிலைகளில் நீண்டகால மாற்றங்கள் ஏற்படுவதனால் நிகழ்கின்றது. அதாவது, துறையின் எதிர்பார்ப்பிற்கும் ஊழியர்கள் திறனுக்கும் இடையிலான வேறுபாடு..

(b) பருவகால வேலைவாய்ப்பின்மை (Seasonal unemployment)
இது ஏற்படுவது உதாரணமாக கட்டிட, சுற்றுலா மற்றும் விவசாயம் போன்ற சில தொழிற் துறைகளில் கூலிக்கான கேள்வி ஆண்டு முழுவதும் பரவகால மாற்றங்களுக்க அமைய ஏற்றத்தாழ்வுகளுக்க உள்ளாவதால் ஏற்படுவதாகும்.

2.8

**கற்கை வெளிப்பாடு : 4.8.1**

- “பசுமைப் பொருட்கள்” (green products) – வாழ்க்கைச் சூழலுக்கான இசைவான பொருட்களை அறிமுகப்படுத்தல்
- மாற்றப்படும் நடைமுறைகள் – சூழல் அக்கறை அல்லது கூடாத மக்கள் அபிப்பிராயம் காரணமாக மரபுரீதியான நடைமுறைகள்; நுட்பங்கள் மாற்றப்படுதல்.
- கற்பித்தல் முறைகளும் சந்தேகங்களும் - சூழல் விடயங்கள் பற்றி நுகர்வோர் தவறான முறையில் போதிக்கப்படுதல்
- புதிய வியாபாரங்களை அறிமுகப்படுத்த முன் சூழற் தாக்க மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- மாசுபடுதலை கையாள்வதற்காக வடிவமைக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2.9

**கற்கை வெளிப்பாடு : 6.2.2**

பாடப் புத்தகத் தொடர்பு: பக்கம்: 373

- இயந்திர சிற்றுபரணங்களின் உற்பத்தி - நிறுவுதல் மற்றும் விற்பனைக்குப் பிந்திய சேவைப் பகுதிக்கு பயிற்சி, ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்குதல்.
- கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் கற்கைக் குறிப்புக்கள், பயிற்சி வினாவிடை, மற்றும் கைக்குறிப்புக்களை வழங்குதல்.
- போசரனசாலையொன்று உணவு மற்றும் குளிர்பானங்கள் வடிவிவல் பொருட்களை வழங்குகின்றது. ஆனாலும், ஒட்டுமொத்த உணவு அனுபவம் கட்டாயமாக சேவைக் கூறினையும் உள்ளடக்கும்.

2.10

**கற்கை வெளிப்பாடு : 6.15.1**

**தரம் (Quality)** – இறுதிப் பெறுபேறு செயற்திட்ட பரிமாணங்களுக்கு இசைவாக இருத்தல் வேண்டும். அதாவது, பெறுபேறு செயற்திட்டம் செய்ய எண்ணியதை அடைதல் வேண்டும்.

**பாதீடு (Budget)** – செயற்திட்டத்தை அங்கீகரிக்கப்பட்ட செலவினத்தை அதிகரிக்காது பூரணப்படுத்த வேண்டும்.

**கால அட்டவணை (Timescale)**- செயற்திட்ட முன்னேற்றமானது பெறுபேறுகள் இணங்கிய காலத்தில் பாவனைக்கு தயாராவதற்கு ஏதுவாக திட்டமிட்ட செயன்முறையை கடைப்பிடிக்க வேண்டும். காலம் பெறுமதிமிக்கது ஆதலால் கிரயத்தை கட்டுப்படுத்த உரிய கால முகாமை உதவும்.

NOT FOR SALE

# பிரிவு 02

## விடை 03

| கற்கை வெளிப்பாடு : 6.6/6.7 |
|---|

(a) பணிகளின் இறுதிப் பெறுபேறு கீழ்வரும் இயல்புகளைக் கொண்டிருக்கும்:

- ஒரே பொருளாக இருத்தல் (they are one-off items)
- அவை வாடிக்கையாளர் கட்டளைகளுக்கு அமைய செய்யப்படும்.
- உற்பத்திகள் நியமத் தன்மை அற்றவை.
- உற்பத்திகளின் வகைகள் அதிக வேறுபாடு உடையவை.

(b)

- விநியோகம் செய்யும் வேகம்
- இறுதிப்பொருளின் தரம்
- ஒரு தொடை இயலுமைகளை (set of capabilities) விற்பனை செய்தல் மூலம் வேறுபட்ட வாடிக்கையாளர்களின் தேவைகள் பலவற்றை நிறைவு செய்யக்கூடியதாக இருத்தல்

(c)

| தொழிற்படுத்திய மொத்த ஊழியர் (N) | தொழிற்சாலை மொத்த உற்பத்திப் பொருட்கள் | MP | AP |
|---|---|---|---|
| 1 | 10 | - | 10 |
| 2 | 22 | 12 | 11 |
| 3 | 36 | 14 | 12 |
| 4 | 48 | 12 | 12 |
| 5 | 58 | 10 | 11.6 |
| 6 | 64 | 6 | 10.6 |
| 7 | 66 | 2 | 9.4 |
| 8 | 64 | -2 | 8 |

(d) மூன்றாவது ஊழியரை வேலைக்கு சேர்த்த பின்னர் குறைந்து செல்லும் எல்லை வருவாய் விதி செயற்பட ஆரம்பிக்கும்.

NOT FOR SALE

**விடை 04**

**கற்கை வெளிப்பாடு : 6.12**

(a)

- நிறுவனத்திற்கு தரமான ஊழியரை ஆட்சேர்க்க உதவும்.
- மனிதவள திட்டமிடல் மூலம் நிறுவனங்கள் ஊழியர்களில் திடீர் அதிகரிப்பு மற்றும் பற்றாக் குறைகளை தவிர்க்கின்றது.
- மனிதவள திட்டமிடல் தற்போதைய மனித வளங்களை மதிப்பிட உதவுகின்றது.
- மனிதவள திட்டமிடல் எதிர்கால மனிதவள தேவைகளை நிறைவுசெய்ய உதவுகின்றது.
- மனிதவள திட்டமிடல் ஊழியர்களை தக்கவைக்க உதவுகின்றது.
- இது திறமைத் தளத்தை அதிகரிப்பதற்கு பயிற்சி வழங்குதல் மற்றும் தக்கவைத்தலுக்கு உதவுகின்றது.
- மனிதவளத் திட்டமிடலானது, நிறுவனத்தின் மனிதவளப் பாதீடு மற்றும் மனிதவளரீதியான செலவினங்களை நிருவகிக்க உதவுகின்றது.

(b)

- நிறுவனத்தில் ஊழியர் செயலாற்றுகை மதிப்பாய்வு இல்லையெனில், முகாமையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஊழியர்களின் செயற்திறன் பற்றிய சீரற்ற அறிவை கொண்டிருப்பர்.
- முகாமையாளர்களும் மேற்பார்வையாளர்களும் ஊழியர்களின் செயற்பாடுகள் பற்றி எழுமானமான கருத்தினை பெறுவர்.
- அவர்கள் ஊழியர்களின் குறைபாடுகள் பற்றி நியாயமான எண்ணத்தை கொண்டிருக்கக் கூடும்.
- சுயதீர்ப்புக்களை மேற்கொள்ளல் இலகுவானதாக இருந்தாலும், எழுத்துமூலமாக அல்லது விடய முகப்பில் விபரத்தை நியாயப்படுத்துதல் இலகுவானதல்ல.
- தூண்டப்பட்டாலன்றி, முகாமையாளர்கள் மிகவும் அரிதாகவே தமது ஊழியர்களுக்கு பின்னூட்டலை வழங்குவர்.

(c)

- முகாமைப் பிரச்சினைகள்
- ஊழியர்களை நிருவகிப்பதில் கடினத்தன்மை ஏற்படுதல்.
- தொழிற்பாட்டுக் கிரயம் அதிகரித்தல்
- வேலை நீக்கப்படும் எனும் பயம்.

**(மொத்தம்: 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

## விடை 05

| கற்கை வெளிப்பாடு : 5.2 |
|---|
| பாடப் புத்தகத் தொடர்பு: பக்கம் 341/350 |

(a) **அனுகூலங்கள்**

1. நிபுணத்துவங்கள் ஒன்றுசேர்க்கப்படல். வேலைப் பிரிவு விசேட துறைகளில் மேற்கொள்ளப்படுவதால்.
2. ஒரு வேலை இரண்டு முறை மேற்கொள்ளப்படுவதை தவிர்த்தல்.
3. இது தொழிற்பாட்டு விசேடத்துவம் பெற்றவர்களின் ஆட்சேர்ப்பு, முகாமை மற்றும் விருத்தியை வசதிப்படுத்தும்.
4. இது மத்தியமயப்படுத்தப்பட்ட வியாபாரங்களுக்கு பொருத்தமானது.

**பிரதிகூலங்கள்**

1. இது வாடிக்கையாளர் மற்றும் வெளியீடுகளைக் காட்டிலும் அகச் செயன்முறைகள் மற்றும் உள்ளீடுகள் பற்றி அதிக கவனம் செலுத்துகின்றது.
2. தொழிற்பாடுகளுக்க இடையில் தொடர்பாடல் பிரச்சினைகள் எழக்கூடும்.
3. உயரமான நிறுவனக் கட்டமைப்புக்களில் போதிய ஒத்துழைப்பு இல்லாமை. வேறொரு தொழிற்பாடு அல்லது பிரிவினை சம்பந்தப்படுத்திய ஒரு தொழிற்பாடு அல்லது பிரிவின் தீர்மானங்களை மேல்மட்டத்திற்கு தெரிவித்து அவர்களால் கையாளப்பட வேண்டி உள்ளதனால், சிரேஷ்ட முகாமை அதிகரித்தல்.
4. தொழிற்பாட்டுக் கட்டமைப்புக்கள் தகவல் மற்றும் வேலைப் பாய்வுகளுக்கு நிலைக்குத்தான தடைகளை ஏற்படுத்துதல்.

(b)

- உருவமற்ற அமைப்புக்கள் Virtual organizations: இந்த அமைப்பு தனிநபர்கள், அணிகள் அல்லது கம்பனிகளை கொண்டிருக்கக்கூடும். அங்கத்தவர்கள் பூகோளரீதியாக பரந்துள்ளதுடன், இந்த அமைப்புக்கள் வழக்கமாக பௌதிக இருப்பிடம் இல்லாது இலத்திரனியரீதியாக மாத்திரம் இருக்கும்.

- குழிவான அமைப்புக்கள் Hollow organizations: மனித வளங்களும் செயற்பாடுகளும் முக்கியமான மற்றும் முக்கியமற்ற தகுதிகளுக்கு இடையில் பிளவுபட்டிருக்கும். முக்கியமற்ற சகல செயன்முறைகள் மற்றும் செயற்பாடுகள் வெளிமூலப்படுத்தப்படும். எனவே, இந்த அமைப்புக்கள் அவற்றின் முக்கிய செயற்பாடுகளில் கவனம் செலுத்தும்.

- கட்டக அமைப்புக்கள் Modular Organizations: அமைப்பு உற்பத்தி செய்யும் பொருள் அல்லது சேவையின் வேறுபட்ட மூலகங்கள் அல்லது கூறுகள் வெவ்வேறு வழங்குனர்களுக்கு வெளி மூலப்படுத்தப்படும். அமைப்பினுள் தக்கவைக்கப்பட்ட மக்கள் இறுதிப் பொருளை அல்லது சேவையை ஆக்கும் வகையில் இந்த மூலகங்களை ஒருங்கு சேர்ப்பர் அல்லது இணைப்பர். இந்தக் கட்டமைப்பானது, அமைப்பு மிகவும் நெகிழ்ச்சி யானதாக இருக்கவும் சந்தைத் தேவைகளுக்கு பதிலிறுக்கக்கூடியதாக இருப்பதற்கும் இயலுமையை அளிக்கும் அதேவேளை வழங்குனர்களின் நம்பகத் தன்மையிலும் தங்கியுள்ளது.

**(மொத்தம்: 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

## விடை 06

**கற்கை வெளிப்பாடு : 4.5**

(a)

- அரசாங்கங்கள் அந்நிய நாணய ஒதுக்கங்களை செலவு செய்யவோ அல்லது வைத்திருக்கவோ வேண்டியதில்லை.
- வியாபாரத் தொக்குகளுக்கு சுயமான செம்மையாக்கங்கள்.
- சென்மதி மீதிப் பற்றாக்குறைகளும் மிகைகளும் சுயமாகவே திருத்தப்படுதல்.
- நாணயமாற்று வீதங்கள் பொருளாதாரப் புறநிலைகளை பிரதிபலிப்பதால், வளங்களின் வினைத்திறனான ஒதுக்கம் ஊக்குவிக்கப்படுகின்றது.
- வங்கிகளை காப்பாற்றுவதற்கு மத்திய வங்கி இறுதி உதவிவழங்குனர் நிலையை தக்கவைக்கின்றது.
- நிலைப்படுத்தப்பட்ட நாணயமாற்று விதங்களை (pegged rates) தாக்குகின்ற வீழ்ச்சிகளை குறிப்பாக, ஊகநோக்குத் தாக்கங்களின் ஆரம்பம் அடிப்படையானதாக இல்லாது பல சமநிலைகளை கொண்டதாக இருப்பின், தவிர்த்தல்.
- நாணயச் சுதந்திரம் (Monetary independence)

(b)

கம்பனியானது, நாணயம் Q வின் பெறுமதி இறக்கம் காரணமாக டொலரில் அமைந்த அதன் கடன்படுகைகளுக்கு எதிராக பலத்த அந்நியநாணய நாணயமாற்று இழப்புக்களுக்கு முகங்கொடுக்கும்.

- கம்பனிகளின் நிதிக் கிரயங்கள் உயர்வடையும். ஒரு நாட்டின் நாணயம் அமெரிக்க டொலருக்கு எதிராக பெறுமதி இழப்பின், டொலரில் அமைந்த பரிப்புக்களின் அவற்றின் உள்நாட்டு நாணயம் தொடர்பாக அதிகரிப்பதுடன், அதன் காரணமாக நிதிக் கிரயங்களும் அதிகரிக்கும்.
- அதேநேரம் கடன் மீள்கொடுப்பனவும் அதிகரிக்கும்.
- சர்வதேச அழைப்பு வியாபாரம் அமெரிக்க டொலரில் பட்டியலிடுவதால், கம்பனி அந்த வியாபாரத்திலிருந்து அதிக இலாபம் பெறும். எனினும், சர்வதேச அழைப்புக்களில் வீழ்ச்சி காரணமாக டொலர் வருமானம் அதிகம் வீழ்ச்சியடையும்.
- இவற்றின் விளைவாக கம்பனி இலாபம் வீழ்ச்சியடையும்.

(c)

- கடன்படுனர் டொலர்களில் வருமானத்தை பெற்றால், நாணய மாறற்திறனுக்கு எதிராக இயற்கையில் தளம்பற்காப்பு ஏற்படுவதனால், நாணயமாற்று அந்நிய நாணய இழப்புக்களை குறைக்க முடியும்.
- கம்பனி USD தேவைப்படும் காலத்தில் அதனை பெறக்கூடியதாக முன்னதாகவே முன்னாற்றல்களை (forward) நிலையான தெரிந்த விலையில் வாங்கமுடியும், அல்லது SWAP, பியூச்சர் (Future) ஒப்பந்தங்களை செய்துகொள்ள முடியும்.
- செயற்பாடுகளை உள்ளூர்ச் சந்தையில் வெளிமூலப்படுத்த முடியும்.

**(மொத்தம்: 10 புள்ளிகள்)**

## பிரிவு 3

**விடை 07**

| **கற்கை வெளிப்பாடு: 3.5.1/3.7.1/3.11.1** |
|---|

(a)

சமப்பாட்டுப் புள்ளியில் Qd = Qs

1300-2P = 100+ 2P

P = 300A$

Q = 700

(b)

i. கூலி நிரம்பல் தட்டுப்பாடு (shortage of labour supply)

இது கூலியை அதிகரிக்கச்செய்வதன் மூலம் உற்பத்திக் கிரயத்தை அதிகரிக்கச் செய்யும்.

இது நிரம்பல் வளையியை இடப்புறமாக நகரச் செய்யும். (S இலிருந்து S1 க்கு).
இது விலையில் அதிகரிப்பையும் (P இலிருந்து P1 க்கு) கணியத்தில் வீழ்ச்சியையும் (Q இலிருந்து Q1 க்கு) ஏற்படுத்தும்.




NOT FOR SALE

ii. செயற்கைக் கறுவாவின் குறைந்த விலை

செயற்கைக் கறுவாவின் குறைந்த விலை காரணமாக செயற்கைக் கறுவாவிற்கான கேள்வி அதிகரிப்பதுடன், அது இயற்கைக் கறுவாவிற்கான கேள்வியை வீழ்ச்சி அடையச் செய்யும்.

கேள்வி வளையி உள்நோக்கி நகர்ந்து (D இலிருந்து D1 க்கு) விலையை வீழ்ச்சி அடையச் செய்து (P இலிருந்து P1 க்கு) கணியத்தையும் வீழ்ச்சி அடையச் செய்யும்.(Q இலிருந்து Q1 க்கு)




(c)




NOT FOR SALE

அரசாங்கம் மானியத்தை அறிமுகப்படுத்தும்போது, நிரம்பல் வளையி S இலிருந்து S1 க்கு நகரும். அதன் விளைவாக சமநிலைக் கணியம் Q1 க்கு பெயர்வதுடன், அவை P1 க்கு விற்கப்படலாம். எனவே, மானியம் இரண்டு தாக்கங்களை கொண்டிருக்கும்.

சமநிலையில் வழங்கப்பட்ட தொகை Q0 இலிருந்து Q1 க்கு அதிகரிக்கும்.
விலை வீழ்ச்சியடைகின்ற போதிலும் (P0 இலிருந்து P1 க்கு) விலையில் வீழ்ச்சியானது மானியத் தொகையைவிட குறைவாக இருக்கும். (P1-P0)

(d)

- செயற்கைக் கறுவாமீது நேரில் வரிகளை விதித்தல் (இறக்குமதித் தீர்வைகள் / வரிகள்). இது நிரம்பல் வீழ்ச்சியடைந்து விலைகளை அதிகரிக்கச் செய்வதால், இது ஆர்கிஸ்தானில் கொள்வனவு செய்யப்படும் கணியத்தை குறைவடையச் செய்யும்.

- செயற்கைக் கறுவாவின் இறக்குமதியை கட்டுப்படுத்துவதன் மூலம் ஆர்கிஸ்தானில் செயற்கைக் கறுவாவவின் கிடைப்பனவை குறைவடையச் செய்யும்.

(e)

- அதிக எண்ணிக்கையான விவசாயிகள் கறுவாப் பயிர்ச்செய்கை செய்தல்.
- உற்பத்திப் பொருட்கள் ஒரே இனமானவை (homogeneous).
- எனவே ஒரு விவசாயியால் விலையில் தலையீடு செய்ய முடியாது.
- அத்துடன் அனுமதி மற்றும் வெளியேறற் தடைகள் இருப்பதாக தெரியவில்லை.

அதனால் சந்தைக்கட்டமைப்பு நிறைபோட்டி அமைப்பினதாக உள்ளது.

(f)

தொழிலாளர்கள் பற்றாக்குறை மற்றும் செயற்கைக் கறுவாவினால் ஏற்பட்ட போட்டியினால் விவசாயிகள் நட்டத்தை அனுபவித்து வந்தனர். (கிரயம் மிகவும் அதிகமாக இருந்தமை)

அனுமதி மற்றும் வெளியேறற் தடைகள் இல்லாதபோது விவசாயிகள் தொழிற்துறையை விட்டு வெளியேறுவதனால், அது சந்தையில் விலைகளை அதிகரிக்கச் செய்து நட்டத்தை குறைவடையச் செய்துள்ளது.

விவசாயிகள் சாதாரண இலாபத்தினை பெற ஆரம்பித்ததும், வெளியேறுகை நிறுத்தப்படும்.

NOT FOR SALE

## பொறுப்பு மறுத்தல் அறிவித்தல் - Notice of Disclaimer

இந்த விடைகள் முற்றுமுழுதாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் (CA Sri Lanka) தரப்பட்டுள்ளதுடன், இவற்றை மாதிரி விடைகள் என்ற அடிப்படையிலேயே நீர் ஏற்றுக் கொள்கின்றீர்.

இவை மாதிரி விடைகளாக கருதப்பட வேண்டுமே தவிர சரியான / எதிர்பார்த்த விடைகளாக அல்ல.

இந்த விடைகள் இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டுள்ளன. அவையாவன:

1. பரீட்சை வினா ஒன்றிற்கு மாதிரி விடைக்கான விபரமான உதாரணத்தை தருதல்ளூ அத்துடன்

2. பாடத்தில் மாணவரின் ஆராய்ச்சி மேற்கொள்ள அவர்களுக்கு உதவுவதுடன், பாடம் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவுவதாகும்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இந்த மாதிரி விடைகள் தொடர்பில் எந்தவொரு உத்தரவாதத்தையும் தரவில்லை ஆதலினால், இது தொடர்பாக எந்தவொரு துயரையும் இந்த இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நீர் கொண்டுவருதல் அர்த்தமற்றது. எனினும், நீர் இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு, அச்சுறுத்தல் அல்லது கேள்வி எதனையும் எழுப்பி அதில் நீர் வெற்றிபெறாத இடத்து இதனால் நிறுவகத்திற்கு ஏற்படும் சட்டச் செலவுகள் மற்றும் எதிர் நடவடிக்கை தொடர்புபட்ட சகல செலவுகளையும் நீர் பட்டக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு நீர் செலுத்த வேண்டும். இதே விடயத்திற்காக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் அதன் இந்த உரிமையையோ அல்லது இதில் விபரிக்கப்பட்டுள்ள அல்லது இலங்கைச் சட்டங்களின் கீழான அதன் உரிமைகளையோ உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படின், அதற்குரிய சட்டக் கட்டணம் மற்றும் செலவுகளை நீர் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு செலுத்த வேண்டும்.

© 2013 இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீலங்கா).
முழுப் பதிப்புரிமையுடையது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் எழுத்துமூல முன் அனுமதியின்றி இந்த ஆவணத்தின் பகுதியினை மறுபிரசுரம் செய்வதோ அல்லது எந்த வடிவத்திலும் இலத்திரனிய, எந்திர, புகைப்படப் பிரதியிடல் பதிவுசெய்தல் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக அனுப்புதலோ கூடாது.

NOT FOR SALE